SLIBTEC
SRI LANKA INSTITUTE OF BIOTECHNOLOGY

ஏலத்திற்கான அழைப்புகள் (Invitation for Bids – IFB)

ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னொலஜி (தனியார்) லிமிடெட் (SLIBTEC)

SLIBTEC கட்டம் I கட்டிடம், மஹேனவத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம
மாணவர் பயிற்சி ஆய்வகத்தை நிறுவுவதற்கான கொள்முதல்

ஒப்பந்த இலக்கம்: SLIBTEC/PROC/365/NCB/Work/Procurement of Establishment of Student Training Laboratory

1. ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னொலஜி (தனியார்) லிமிடெட் (SLIBTEC) சார்பாக, திணைக்களக் கொள்முதல் குழுவின் தலைவர், கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் பயிற்சி ஆய்வகத்தை நிர்மாணிப்பதற்காகத் தகுதியும் தேவையான தகைமைகளும் கொண்ட ஏலதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலங்களைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கின்றார்.
   - கட்டிடவியல் மற்றும் உட்புறப் பணிகள் (Civil and Interior Works)
   - மின்சார மற்றும் ELV அமைப்புகள்
   - HVAC மற்றும் சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டு அமைப்புகள்
   - ஆய்வக தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்
   - ICT மற்றும் ஒலி-ஒளி வசதிகள்
   - பாதுகாப்பு மற்றும் துணை உட்கட்டமைப்பு
2. ஏலச் செயற்பாடு தேசியப் போட்டி ஏல நடைமுறை (National Competitive Bidding – NCB) மூலம் முன்னெடுக்கப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்குத் தகுதிபெறும் வெற்றிகரமான ஏலதாரர், தடைப்பட்டியல் (blacklist) பட்டியலில் இடம் பெற்றிருக்கக் கூடாது.
4. இக்கொள்முதலுக்கான விரிவான தகுதித் தேவைகளை SLIBTEC இணையதளத்தில் https://slibtec.gov.lk/procurement/ பார்வையிடுமாறு ஆர்வமுள்ள ஏலதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆங்கில மொழியிலான முழுமையான ஏல ஆவணத் தொகுப்பை 2026 ஒக்டோபர் 20 முதல் 2026 நவம்பர் 10 வரை மேலே குறிப்பிட்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

   ஏலத்திற்கு முந்தைய கூட்டம் (pre-bid meeting) 2026 ஒக்டோபர் 23 அன்று காலை 10.00 மணிக்கு, SLIBTEC கட்டம் 1 கட்டம், மஹேனவத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம என்ற முகவரியில் நடைபெறும்.

   இக்கொள்முதலில் பங்கேற்க, கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரு பிரிவுகளிலும் செல்லுபடியாகும் CIDA பதிவு கொண்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே தகுதி உடையவர்கள்:

   EM Grade: EM1, EM2, EM3, EM4 அல்லது EM5

   SP Grade: SP1, SP2, SP3 அல்லது SP4
5. திரும்பப் பெற முடியாத LKR 5,000 கட்டணத்தை, People's Bank, ஹோமாகம கிளையில் உள்ள Sri Lanka Institute of Biotechnology Pvt Ltd நிறுவனத்தின் வங்கி கணக்கு இலக்கம் 049-1-001-7-0067474-இல் வைப்புச் செய்ய வேண்டும்.

   (குறிப்பு: பண வைப்புச் சீட்டில் வைப்பாளரின் விபரங்களையும் வைப்பின் நோக்கத்தையும் "Non-Refundable Tender Fee" எனக் குறிப்பிடுவது அவசியம். அசல் பண வைப்புச் சீட்டை ஏலத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கட்டணம் ரொக்கமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும் வேறு எந்தவொரு கட்டண முறையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)
6. மேலதிக தகவல்களை ஆர்வமுள்ள ஏலதாரர்கள் அலுவலக வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீழ்க்கண்ட முகவரி, மின்னஞ்சல் அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்:

   முகவரி : Sri Lanka Institute of Biotechnology, Phase 1 Building, Mahenawatta, Thalagala Road, Pitipana, Homagama

   மின்னஞ்சல் : tharindu.madushankha@slibtec.gov.lk navoda.balasooriya@slibtec.gov.lk

   தொலைபேசி : 0113 431 844
7. ஏலப்புள்ளிகள் இரண்டு பிரதிகளாக, "தலைவர், திணைக்கள கொள்முதல் குழு, ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோடெக்னொலஜி (Sri Lanka Institute of Biotechnology), SLIBTEC கட்டம் 1 கட்டிடம், மஹேனவத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம" என்ற முகவரிக்கு 2026 நவம்பர் 10 அன்று பிற்பகல் 2.30 மணிக்குள் அல்லது அதற்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் ஏலப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். ஏலப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிந்தவுடன், வருகை தரும் ஏலதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும்.

தலைவர்
திணைக்கள கொள்முதல் குழு
Sri Lanka Institute of Biotechnology Pvt Ltd (SLIBTEC)
20 ஒக்டோபர் 2026